கரூர் அருகே

டாஸ்மாக் ஊழியர்கள் மீது தாக்குதல்

நடவடிக்கை எடுக்க ஊழியர்கள் கோரிக்கை

கரூர், நவ. 12–

கரூர் காந்திகிராமம் பகுதியில் உள்ள டாஸ்மார்க் கடையில் மேற்பார்வையாளராக கண்ணன் என்பவரும் விற்பனையாளராக ரமேஷ் என்பவரும் பணிபுரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில் சம்பவத்தன்று கடைக்கு வந்த மது பிரியர்கள் சிலர் வரிசையில்நிற்காமல்குறுக்கே சென்று மது வாங்க முயற்சித்ததாக தெரிய வருகிறது. இதனை மேற்பார்வையாளர் கண்ணன் மற்றும் விற்பனையாளர் ரமேஷ் ஆகியோர் தட்டி கேட்டுள்ளார்.

இதனால் ஆத்திரம் அடைந்த மது பிரியர்கள் ஊழியர்களை தகாத வார்த்தையால் திட்டியதுடன் கற்கள் மற்றும் மது பாட்டில்களை கொண்டு தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த தாக்குதலில் காயம் அடைந்த இருவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவம் தொடர்ந்து கரூர் மாவட்ட அனைத்து டாஸ்மாக் தொழில் சங்கங்களின் கூட்டமைப்பின் சார்பில் நேற்று மாவட்ட டாஸ்மாக் மேலாளரை சந்தித்து மனு அளித்தனர்.

அந்த மனுவில் டாஸ்மார்க் கடையில் பணியாற்றும் ஊழியர்களுக்கு போதிய பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் ஊழியர்கள் அச்சத்துடன் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை நிலவுகிறது. எனவும் ஊழியர்களின் உயிருக்கு பாதுகாப்பு அளிக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும் மேற்பார்வையாளர்கள் மற்றும் விற்பனை யாளர்களை தாக்கியநபர்கள்மீது போலீசார் வழக்கு பதிவு செய்து சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். என அந்த மனுவில் கூறியிருந்தனர். இதைத் தொடர்ந்து டாஸ்மாக் ஊழியர்கள் தாக்கப்பட்டதை அறிந்து சிறிது நேரம் டாஸ்மாக்கடைகள்மூடப்பட்டன.

அலங்காநல்லூர் அருகே

போலீஸ் ஏட்டு தற்கொலை

தூக்கில் தொங்கினார்



அலங்காநல்லூர்,நவ.12

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே தினமணி நகர் பகுதியைச்சேர்ந்தவர்மோகன்தாஸ்(44). மதுரைமாநகர்பகுதியில்தலைமை காவலராக பணிபுரிந்து வந்தார். இவருக்கு அருணாதேவி என்ற மனைவியும்,2வயதில் ஒரு பெண் குழந்தையும் உள்ளனர். இந்நிலையில் குடும்ப பிரச்சினை காரணமாக நேற்று நள்ளிரவு தனது வீட்டில் உள்ள ஹாலில் சேலையால் தூக்கிட்டு மோகன்தாஸ் தற்கொலை செய்து கொண்டார். இந்த சம்பவம் குறித்து தகவல் அறிந்த அலங்காநல்லூர் போலீசார் மோகன்தாஸ் உடலை கைபற்றி உடற்கூறு ஆய்விற்காக மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து மேற் கொண்டு விசாரணை செய்து வருகின்றனர்.

நிலக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம் முன்பு

ஆவண எழுத்தர்கள், வழக்கறிஞர்கள் காத்திருப்பு போராட்டம்

பதிவுகள் முடங்கியதால் பொதுமக்கள் அவதி

நிலக்கோட்டை, நவ.12–

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை சார் பதிவாளர் அலுவலகம் அணைப்பட்டி சாலையில் திரவியம் நகரில் அமைந்துள்ளது.இங்கு நேற்று தமிழ்நாடு ஆவண நகல் எழுத்தர்கள் சங்கம் நிலக்கோட்டை கிளை சங்கத் தலைவர் நடராஜன் தலைமையில் கவன ஈர்ப்பு காத்திருப்புப் போராட்டம் நடைபெற்றது.

தமிழக அரசு பதிவுத்துறையில் ஸ்டார் 3.0 மற்றும் இடெண்டர் மூலம் பதிவுப் பணிகளை தனியார் மையமாக்க அறிவிப்பு செய்ததை உடனே ரத்து செய்ய வலியுறுத்தி, 10, 11 ஆகிய இரண்டு நாட்கள் ஆவண எழுத்தர்கள் தங்கள் அலுவலகங்களை மூடிவிட்டு காத்திருப்புப் போராட்டம் நடத்தினர். “இரண்டு நாட்கள் எக்காரணம் கொண்டும் ஆவண பதிவுகளுக்கு எந்த வேலையும் செய்ய மாட்டோம்” என்று கடைகளை பூட்டி விட்டு போராட்டம் நடத்தியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த போராட்டத்தில் சங்கச் செயலாளர் பூரீதர், சங்க பொருளாளர் சின்னையா மற்றும் இளம் வழக்கறிஞர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன் காரணமாக நேற்று நிலக்கோட்டை பத்திரப்பதிவு அலுவலகத்தில் ஏராளமான பதிவுகள் நடைபெறவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர். பத்திரப்பதிவுக்கு வந்த பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

திண்டுக்கல் அரசு மருத்துவமனை

தண்ணீர் தொட்டியில் ஏறி வாலிபர் தற்கொலை மிரட்டல்

போலீசார் மீட்டனர்



திண்டுக்கல், நவ.12–

மதுரை மேலூர் பகுதியை சேர்ந்த அசாருதீன் (27). இவர் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு திண்டுக்கல் பகுதியில் போர்வை விற்பனை செய்வதற்கு வந்தார்.

இந்த நிலையில் அவர் நேற்று இரவு நாகல்நகர் மேம்பாலம் அருகே நடந்து சென்றபோது வழியாக வந்த மோட்டார்சைக்கிள் இவர் மீது மோதியது இதில் காயம் அடைந்த அசாருதீனை 108 ஆம்புலன்ஸ் வாகன மூலம் மீட்டு திண்டுக்கல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தனர் . இதற்கிடையே சிகிச்சையில் இருந்த அசாருதீன் நேற்று இரவு சுமார் 11 மணி அளவில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்து வெளியே சென்றார். பின்னர் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் இருந்த மேல்நிலை தண்ணீர் தொட்டியில் ஏறி நின்று தனக்கு முறையாக சிகிச்சை அளிக்கவில்லை என்று கூறினார். அதை பார்த்தஊழியர்கள்அவரை கீழே இறங்கி வரும்படி கூறினர்.

ஆனால் கீழே இறங்க மறுத்த அவர் யாராவது மேலே வந்தால் குதித்து விடுவதாக மிரட்டல் விடுத்தார். இது பற்றி திண்டுக்கல் வடக்கு போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப் பட்டது.

அதன் பேரில் இன்ஸ் பெக்டர் வசந்தகுமார் தலைமையிலான போலீசார் விரைந்து வந்து பேச்சு வார்த்தை நடத்தி அவரை சமரசம் செய்தனர். அதைத்தொடர்ந்து அவர் கீழே இறங்கி வந்தார். அதைத் தொடர்ந்து அவருக்கு சிகிச்சை அளிக்கப் பட்டு வருகிறது. இந்த சம்பவத்தால் மருத்துவக் கல்லூரி வளாகத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது குறித்து வடக்கு போலீசார் விசாரித்து வருகின்றனர்.

திருப்பத்தூர் முருகன் கோவிலில் திருக்கல்யாண உற்சவம் தொடக்கம்

நவ.15—ல் சூரசம்ஹாரம் நடக்கிறது

திருப்பத்தூர் நவ 12, சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் காளியம்மன் கோயில் அருகே அமைந்துள்ள ஸ்ரீமுருகப்பெருமான்சன்னதியில் பிரசித்தி பெற்ற திருவிழாவான கந்தசஷ்டி திருவிழாஎனப்படும் திருமுருகன் திருநாள் விழா, நேற்று மாலை காப்புகட்டுதல் மற்றும் வழிபாடுடன் தொடங்கியது. 11 ஆம் ஆண்டுநடைபெறும் இந்த கந்த சஷ்டி விழாவில் வள்ளி தெய்வானையோடு சமேத ஸ்ரீ முருகப் பெருமானுக்கு பால், தயிர், திருமஞ்சனம், இளநீர், மஞ்சள், உள்ளிட்ட 16 வகையான வாசனை திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடத்தப்பட்டது. அதனை தொடர்ந்து தீபாராதனை நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சியில் பாவை கண்ணதாசனின் ஆன்மீக சொற்பொழிவு நடைபெற்றது. இதில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு ஸ்ரீமுருகப்பெருமானை தரிசனம் செய்து சென்றனர். 7 நாட்கள் நடைபெறும் இந்த விழா நாட்களில் ஸ்ரீமுருகப் பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்று, சிறப்பு அலங்காரம் நடைபெற உள்ளது. அதே போன்று விழா நாட்களில் ஆன்மீக சொற்பொழிவு, பக்தி பாடல்கள், பட்டிமன்றம் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது. விழாவின் சிகர நிகழ்ச்சிகளாக, ஆறாம் நாள்விழாவானவருகின்ற நவ., 15ம் தேதி ஸ்ரீமுருகன் புறப்பாடாகி ஸ்ரீ ராஜகாளியம்மனிடம்வேல்வாங்கி, கோயில் அருகே அமைந்துள்ள திடலில் சூரனை வதம் செய்யும், சூரசம்ஹாரம் நிகழ்ச்சி நடைபெறும். தொடர்ந்து 7ம் நாளான வருகின்ற நவ., 16ம் தேதி கோயில் வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விழா மேடையில் திருக்கல்யாண வைபவம் நடைபெற உள்ளது. பின்பு இரவு தேவியருடன் ஸ்ரீ முருகன் அலங்கரிக்கப்பட்ட வாகனத்தில் எழுந்தருளி திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிப்பதுடன் விழா நிறைவு பெருகிறது.

விழாவில் ஒவ்வொரு நாளும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்படுகிறது. விழா ஏற்பாடுகளை ஸ்ரீ காளியம்மன், ஸ்ரீ ராஜ காளியம்மன், ஸ்ரீ முருகன் திருக்கோயில் கந்த சஷ்டி விழா குழுவினர் செய்து வருகின்றனர்.

திண்டுக்கல் அருகே

புதுமாப்பிள்ளை மர்மச்சாவு

போலீசார் தீவிர விசாரணை

நிலக்கோட்டை, நவ. 12

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகே சின்னமநாயக்கன்கோட்டையைச் சேர்ந்தவர் முருகன். இவரது மகன் கோபாலகிருஷ்ணன் வயது 22. இவர் நிலக்கோட்டை பகுதியில்கூலிவேலைசெய்து வந்துள்ளார். கடந்த சில மாதங்களுக்கு முன்புதான் எழிலரசி என்பவரை திருமணம் செய்து கொண்டுள்ளார். திருமணத்திற்கு பிறகு இருவரும் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்ததாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு வேலைக்கு வசதியாக இருக்கும் என்பதற்காகநிலக்கோட்டையில் வாடகைக்கு வீடு பிடித்து மனைவியுடன் குடியிருந்து வந்துள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு கோபாலகிருஷ்ணனும், அவரது நண்பர் குகனும் வீட்டில் இருந்து மது அருந்தி கொண்டிருந்ததாக கூறப்படுகிறது. அப்போது அவரது மனைவி எழிலரசி வெளியில் சென்று இருந்துள்ளார். சிறிது நேரம் கழித்து வெளியே சென்றிருந்த மனைவி எழிலரசி வீட்டிற்கு திரும்பி வந்த போது, தனது கணவர் கோபாலகிருஷ்ணன் தூக்கில் தொங்கிக் கொண்டிருந்ததை பார்த்து அதிர்ச்சியடைந்து கதறி அழுதுள்ளார். உடனடியாக சின்ன மநாயக்கன் கோட்டையில் உள்ள அவரதுதந்தை முருகன்மற்றும் உறவினர்களுக்கு தகவல் கொடுத்துள்ளார். தகவல் அறிந்து உடனடியாக வந்த உறவினர்கள், கோபாலகிருஷ்ணன் உடலை எடுத்துக் கொண்டு சின்னம நாயக்கன் கோட்டை மயானத்தில் அடக்கம் செய்ய முயன்றனர். அப்போது கோபாலகிருஷ்ணன் உடலில் பல இடங்களில் காயங்கள் இருந்ததை பார்த்து உறவினர்கள்சந்தேகமடைந்துள்ளனர். இது தற்கொலை இல்லை, இதில் ஏதோ மர்மம் இருக்கிறது என உறவினர்கள் கூறி உடனடியாக நிலக்கோட்டை போலீசுக்கு தகவல் கொடுத்தனர். தகவல் அறிந்ததும் நிலக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெய பாண்டியன் தலைமையில் போலீசார் விரைந்து வந்து கோபாலகிருஷ்ணன் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர்.

அங்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்ட பின்னர் அவரது உடல் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இது குறித்து நிலக்கோட்டை போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெய பாண்டியன் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக அன்று இரவு கோபாலகிருஷ்ணனுடன் இருந்த நண்பர் குகனிடமும், அவரது மனைவி எழிலரசியிடமும் போலீசார் தீவிரமாக விசாரணை நடத்தி வருகின்றனர். மேலும் உடலில் இருந்த காயங்கள் எப்படி ஏற்பட்டது, அவர் தற்கொலை செய்து கொண்டாரா? கொலை செய்யப்பட்டாரா என்ற கோணத்திலும் போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட்

(முன்னர் பிரமல் கேப்பிட்டல் அண்ட் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்)
(இனிமேல் PFL/ பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர் எனக் குறிப்பிடப்படும்) CIN: L65910MH1984PLC032639
பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: யூனிட் எண்-601, 6வது தளம், பிரமல் அமித் கட்டிடம், பிரமல் அகஸ்தியா கார்ப்பரேட் பார்க், காமனி சந்திப்பு, தீயணைப்பு நிலையம் எதிரில், எல்.பி.எஸ் மார்க், குர்லா (மேற்கு), மும்பை- 400070

உடைமை அறிவிப்பு
பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8-(1) மற்றும் பின் இணைப்பு- IV இன் படி அசையா சொத்துக்கானது

பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட் (முன்னர் பிரமல் கேப்பிட்டல் அண்ட் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்) (இனிமேல் P F L / பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர் எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாகிய நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழ், மற்றும் பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகள் 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கப்படும் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியாய் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனாளி(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்)-க்கு, அந்த அறிவிப்பைப் பெற்ற நாளிலிருந்து 60 நாட்களுக்குள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையைத் திருப்பிச் செலுத்துமாறு கோரிக்கை அறிவிப்பு(களை) வழங்குகிறேன். கடனாளி தொகையைத் திருப்பிச் செலுத்தத் தவறியதால், கடனாளி(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், 2002 ஆம் ஆண்டின் பாதுகாப்பு வட்டி அமலாக்க விதிகளின் விதி 8 உடன் சேர்த்துப் படிக்கப்படும் மேற்படி சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (4) இன் கீழ் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தை கீழ்க்கையொப்பமிட்டவர் தன் வசப்படுத்தியுள்ளார். பாதுகாக்கப்பட்ட சொத்துக்களை மீட்கக் கிடைக்கும் கால அவகாசம் தொடர்பாக, சட்டத்தின் பிரிவு 13 இன் துணைப் பிரிவு (8) இல் உள்ள விதிகளுக்கு கடனாளியின் கவனம் ஈர்க்கப்படுகிறது. குறிப்பாக கடனாளியும், பொதுவாக பொதுமக்களும் அந்தச் சொத்துடன் எந்தவொரு பரிவர்த்தனையும் செய்ய வேண்டாம் என்று இதன்மூலம் எச்சரிக்கப்படுகிறார்கள். மேலும், அந்தச் சொத்துடன் செய்யப்படும் எந்தவொரு பரிவர்த்தனையும், பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட் முன்னர் பிரமல் கேப்பிட்டல் & ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்) (இனிமேல் PFL/பாதுகாக்கப்பட்ட கடனளிப்பவர் எனக் குறிப்பிடப்படும்) நிறுவனத்தால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் அதன் மீதான வட்டிக்கு உட்பட்டதாகும்.

வ எண்	கடன் வாங்குபவர்(கள்)/ உத்தரவாதம் அளிப்பவர்(கள்) பெயர்	பாதுகாக்கப்பட்ட சொத்தின் விவரம் (அசையாச் சொத்து)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் தொகை	உடைமை தேதி
	(சேலம் கிளையின் LC எண். 03200003200) மாதேஷ் N (கடன் வாங்குபவர்) அனுராதா N (கூட்டுக் கடன் வாங்குபவர் 1)	சொத்தின் அனைத்துப் பகுதிகளும் பின்வரும் பரப்பளவைக் கொண்டுள்ளன:- சர்வே எண்: 553/13 வெள்ளகவுண்டம்பாளையம் கிராமம் எல்கியம்பட்டி தர்மபுரி தமிழ்நாடு:- 636705 எல்லைகள் பின்வருமாறு:- வடக்கு:- கோபால், வெங்கடேசன் காலி நிலம் மேற்கு:- கோபால் குழுமத்தின் சொத்து கிழக்கு:- 20 அடி அகல பொதுச் சாலை தெற்கு:- ராணி மீதமுள்ள நிலம்	தேதி: 26-06-2023/ ரூ. 4,01,237/- (ரூ. நான்கு இலட்சம் ஆயிரத்து இருநூற்று மூப்பத்தேழு மட்டும்)	07/11/2026
	(தர்மபுரி கிளையின் LC எண் M0149524) மகேந்திரன் K (கடன் வாங்குபவர்) சென்னம்மாள் N. (கூட்டுக் கடன் வாங்குபவர் 1)	சொத்தின் அனைத்துப் பகுதிகளும் பின்வரும் பரப்பளவைக் கொண்டுள்ளன:- கதவு எண் 2, 319, தசிரஹள்ளி கிராமம், சர்வே எண் 91/6 ஏ, நத்தம் பேருந்து நிறுத்தம், தர்மபுரி-635305, தமிழ்நாடு. எல்லைகள் பின்வருமாறு:- வடக்கு:- வேலுமணி இல்லம் பொதுச் சாலை, மேற்கு:- மது இல்லம், கிழக்கு:- பொதுச் சாலை, தெற்கு:- பொதுச் சாலை, தார்ச் சாலை	தேதி: 24-01-2025/ ரூ. 6,93,039.91/- (ரூ. ஆறு இலட்சம் தொண்ணூற்று மூவாயிரத்து மூப்பத்தொன்பது மட்டும் மற்றும் தொண்ணூற்று ஒரு பைசா மட்டும்)	07/11/2026

தேதி: நவம்பர் 12, 2026,
இடம்: தர்மபுரி

கையொப்பம்/- (அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி),
பிரமல் ஃபைனான்ஸ் லிமிடெட்

பொது அறிவிப்பு

கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

பதிவு செய்யப்பட்ட அலுவலகம்: கோத்ரேஜ் ஒன், பிரராஜ்யுாநகர், ஈஸ்டர்ன் எக்ஸ்பிரஸ் ஹைவே, விக்ரோலி (மேற்கு), மும்பை-400079, மகாராஷ்டிரா
கிளை அலுவலகம்: கோத்ரேஜ் கேப்பிட்டல், கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், பிரகாஷ் பிரசிடியம், 110, 2வது தளம், உத்தமர் காந்தி சாலை, சென்னை, தமிழ்நாடு- 600034,

கோரிக்கை அறிவிப்பு

நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002-இன் பிரிவு 13(2)-இன் கீழ், பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3(1)-உடன் சேர்த்துப் படிக்கையில், கீழே கையொப்பமிட்டுள்ள நான், நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 (மேற்கூறிய சட்டம்)-இன் கீழ் கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆவேன். மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(12)-இன் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, பிணைய வட்டி (அமலாக்கம்) விதிகள், 2002-இன் விதி 3-உடன் சேர்த்துப் படிக்கையில், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(2)-இன் கீழ் கோரிக்கை அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்புகளில், கீழே கொடுக்கப்பட்டுள்ள, அவர்களுக்கு வழங்கப்பட்ட அந்தந்த கோரிக்கை அறிவிப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளைத் திருப்பிச் செலுத்துமாறு பின்வரும் கடனாளி(கள்) ("மேற்கூறிய கடனாளி(கள்)") அழைக்கப்படுகிறார்கள். மேற்கூறியவை தொடர்பாக, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 60 நாட்களுக்குள், கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளையும், அத்துடன், கடன் ஒப்பந்தத்தின்படி செலுத்த வேண்டிய மற்றும்/அல்லது வசூலாகும் தேதி வரையிலான, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தேதி(கள்) முதல் செலுத்த வேண்டிய மற்றும்/அல்லது வசூலாகும் தேதி வரையிலான கூடுதல் வட்டியையும், கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்குச் செலுத்துமாறு, மேற்கூறிய கடன் வாங்கியவர்(களுக்கு) மீண்டும் ஒருமுறை இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. கடனை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்துவதற்கான பாதுகாப்பாக, பின்வரும் சொத்துக்கள், மேற்கூறிய கடன் வாங்கியவர்(களால்) முறையே கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்கு அடமானம் வைக்கப்பட்டுள்ளன.

கடன் வாங்குபவர்(கள்)/ உத்தரவாதம் அளிப்பவர்(கள்) பெயர்/கடன் கணக்கு எண்	கோரிக்கை அறிவிப்பு தேதி, தொகை மற்றும் NPA தேதி	பாதுகாக்கப்பட்ட சொத்தின் (அசையாச் சொத்து) விவரம்
1. திரு. கணேஷ் ராஜாமணி (விண்ணப்பதாரர்/கடன் வாங்குபவர்) 5/159, ஏபிஆர் நகர், பொடசப்பட்டி, திருமூர், மதுரை, தமிழ்நாடு-625107 **2. திரு. லட்சுமிஜீ M (இணை விண்ணப்பதாரர்/இணை கடன் வாங்குபவர்)** 5/159, ஏபிஆர் நகர், பொடசப்பட்டி, திருமூர், மதுரை, தமிழ்நாடு-625107 **கடன் கணக்கு எண். GFL3805LP0071071**	05.11.2026 ரூ.4,788,412.00/- (இந்திய ரூபாய் நாற்பத்தேழு இலட்சம் எண்பத்தெட்டு ஆயிரம் நானூற்றுப் பன்னிரண்டு மட்டும்) 04.11.2026	**சொத்தின் விவரம்-** மனை எண் 15 கொண்ட நிலத்தின் ஒரு பகுதி, 1062 சதுர அடி மனைப் பரப்பளவு கொண்டது, அதனுடன் பொதுச் சாலையில் 240 சதுர அடி பிரிக்கப்படாத விகிதாசாரப் பங்கும் சேர்த்து, இரண்டும் சேர்ந்து மொத்தம் 1302 சதுர அடி ஆகும், அதன் மீது கட்டப்பட்ட ஒரு குடியிருப்புக் கட்டிடத்துடன் சேர்த்து, இது திருமோகூர் ஊராட்சி மற்றும் மதுரை-கிழக்கு ஊராட்சி ஒன்றிய எல்லைகளுக்குள், வார்டு எண் 1, பொடசாப்பட்டி, ஏ.பி.ஆர். நகரில் கதவு எண் 5/159/1-இல் அமைந்துள்ளது, மதுரை-கிழக்கு தாலுகா (முன்னர் மதுரை-வடக்கு தாலுகாவுடன்), மதுரை மாவட்டத்தின் பொடசாப்பட்டி கிராமத்தின் மறு-அளவீடு எண் 1/7C [பழைய அளவீடு எண் 1/7 (பகுதி)]-இல் அடங்கியுள்ளது, இதன் வடக்கு எல்லையாக: 20 அடி அகல பொதுச் சாலை உள்ளது; தெற்கு வழி: மனை எண் 17; கிழக்கு வழி: மனை எண் 14; மேற்கு வழி: மனை எண் 16; மற்றும் கூட்டு-1, மதுரை-வடக்கு (முன்னர் ஒய். ஒத்தக்கடையுள்) தணைப் பதிவு மாவட்டம் மற்றும் மதுரை-வடக்கு பதிவு மாவட்டத்திற்குள் அமைந்துள்ளது."

மேற்கூறிய கடனாளிகள் கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்டிற்கு மேற்கூறியவாறு பணம் செலுத்தத் தவறினால், கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், சட்டத்தின் பிரிவு 13(4) மற்றும் பொருந்தக்கூடிய விதிகளின் கீழ், மேற்கூறிய பிணையமாக வைக்கப்பட்ட சொத்துக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கும். இதன் செலவுகள் மற்றும் விளைவுகள் தொடர்பான முழுப் பொறுப்பையும் மேற்கூறிய கடனாளிகளே ஏற்க வேண்டும். கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்டின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி, மேற்கூறிய சொத்துக்களை விற்பனை, குத்தகை அல்லது வேறு எந்த வகையிலும் மாற்றுவதற்கு, இந்தச் சட்டத்தின் கீழ் மேற்கூறிய கடனாளிகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய சட்டத்தின் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளின் விதிகளை மீறும் அல்லது மீறுவதற்குத் துணைபோகும் எந்தவொரு நபரும், சட்டத்தில் வழங்கப்பட்டுள்ளபடி சிறைத்தண்டனை மற்றும்/அல்லது தண்டனைக்கு உள்ளாவார்.

தேதி: நவம்பர் 12, 2026
இடம்: மதுரை

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
கோத்ரேஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட்

பெருநிறுவன அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், பஜாஜ் ஃபின்சர்வ், பஞ்சஷீல் டெக் பார்க், விமான் நகர், புனே - 411014
கிளை அலுவலகம்: பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட், ஜி.வி. ஹைட்ஸ், டோக் நகர், தேனி
பிரதான சாலை, கலவாசல், மதுரை-625016, தமிழ்நாடு
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியின் விவரங்கள்: பெயர்: அருண்குமார் P, மின்னஞ்சல் முகவரி: arunkumar.palanivel@bajajfinserv.inகைபேசி எண்: +91 9080548744

பின் இணைப்பு-IV-A
[விதி 8 (6)-இன் நிபந்தனையைப் பார்க்கவும்]
SARFAESI சட்டம் 2002-இன் கீழ் மின்-ஏல விற்பனை அறிவிப்பு
நிதிச் சொத்துக்களைப் பத்திரமாக்குதல் மற்றும் மறுகட்டமைத்தல் மற்றும் பிணைய வட்டி அமலாக்கச் சட்டம், 2002 ("சட்டம்")-இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனை

பஜாஜ் ஃபைனான்ஸ் லிமிடெட் ("BFL") நிறுவனத்திடம் அடமானம் வைக்கப்பட்டு, சட்டத்தின் விதிகளின் கீழ் B F L - இன் கீழ்க்கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைவசப்படுத்தப்பட்ட, கீழே குறிப்பிடப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்து தொடர்பாக, பொதுமக்களுக்கும், கடன் வாங்கியவர்கள்/கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/அடமானம் வைத்தவர்கள் ஆகியோருக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. இந்தச் சொத்து, கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொகை மற்றும் மேலும் பொருந்தக்கூடிய வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவுகள் போன்றவற்றை வசூலிப்பதற்காக ஏலம் மூலம் விற்கப்படும்.கீழே விவரிக்கப்பட்டுள்ள பாதுகாக்கப்பட்ட சொத்தானது, கீழே விவரிக்கப்பட்டுள்ள நிலுவைத் தொகையை வசூலிப்பதற்காக, பாதுகாப்பு வட்டி (அமலாக்கம்) விதிகளின் ("விதிகள்") விதி எண் 8 மற்றும் 9-இன் கீழ், "உள்ளபடியே, இருக்கும் இடத்திலேயே, உள்ளபடியே, என்ன இருக்கிறதோ அப்படியே" என்ற அடிப்படையில் விற்கப்படுகிறது:

மின் ஏலத்தின் விவரங்கள்

கடன் வாங்கியவர் மற்றும் கூட்டுக் கடன் வாங்கியவரின் பெயர் மற்றும் முகவரி	**விவேக் எண்டர்பிரைசஸ், அதன் உரிமையாளரால் குறிப்பிடப்படுகிறதுவிவேக் பி, 153/349, மார்கபந்து தெரு, நாகம்மாள் தோட்டம், சின்னபுதூர், சேலம்-636007**
கடன் கணக்கு எண்	**P459PLA11968831**
சட்டப்புர்வ கோரிக்கை அறிவிப்பு பிரிவு 13(2)-ன் கீழ் தேதி மற்றும் தொகை	**அறிவிப்புகள் தேதி 6 பிப்ரவரி 2026 கோரிக்கை தொகை ₹3,01,22,666/- (ரூபாய் மூன்று கோடி ஒரு லட்சம் இருபத்து இரண்டு ஆயிரம் அறுநூற்று அறுபத்து ஆறு மட்டும்)**
11.11.2026 அன்றுள்ள நிலுவைத் தொகை	**₹.3,13,25,326/- (ரூபாய் மூன்று கோடி பதின்மூன்று இலட்சம் இருபத்தைந்தாயிரத்து முன்னூற்று இருபத்தாறு மட்டும்)**
அசையாச் சொத்தின் விவரம்	**சொத்து எண் 1 -** சேலம் மாவட்டம், சேலம் மேற்கு சாலை, சுரமங்கலம் SRO, சேலம் தாலுகா, அழகுபரம் புதுர் கிராமம், வார்டு C, பிளாக் எண் 6, T.S. எண் 137-இல் உள்ள சொத்தின் ஒரு பகுதி. இதன் மொத்தப் பரப்பளவு 2460 சதுர அடி ஆகும். இது விற்பனையாளரின் மீதமுள்ள சொத்தின் தெற்கிலும், சிவலிங்கம் தானப் பங்கீட்டுச் சொத்தின் மேற்கிலும்,